# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## ...உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

ரோ-12:2

www.jesuscalls.org

செய்தி மலர்
2020
மார்ச்

இதழ் : 11
மலர் : 16



# சபை ஊழியரின் அன்பு மடல்



## மறுரூபமாகுங்கள்

கிறிஸ்துவிற்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும் அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த பிப்ரவரி மாதம் முழுவதும் கண்மணி போல பாதுகாத்த தேவன் வரும் மார்ச் மாதத்திலும் புதிய ஆசீர்வாதங்களையும், புதிய நன்மைகளையும் புதிய கிருபைகளையும் தந்து நம் சபையை வழி நடத்துவாராக.

இந்த மாதம் முழுவதும் நாம் லெந்து நாட்களை அனுசரிக்கிறோம். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையை ஒருமுறை திரும்பிப்பார்த்து தேவையற்ற தீய செயல்களை வெறுத்து அழித்து விடவேண்டும். புதிய வாழ்க்கை புதிய தரிசனம் புதிய தீர்மானங்கள் புதிய விசுவாசம் புதிய நம்பிக்கை எல்லாவற்றையும் பெற்று புதிய மனிதர்களாய் உருமாறுவதற்கு கர்த்தர் நம்மை அழைக்கிறார். லெந்து நாட்களில் எல்லா ஆராதனைகள் மற்றும் ஜெபக்கூடுகைகளில் தவறாமல் பங்கு பெற்று கர்த்தருடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறார் "நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதியதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" என்று (ரோம-12:2)

இந்த உலகத்திற்கேற்றார் போல வேஷம் போடாமல் மனம் புதிதாக வேண்டும் மறுரூபமாக வேண்டுமென்று வேதம் நமக்கு கட்டளையிடுகிறது. இப்படி மறுரூபமடைந்த சிலரை குறித்து கீழ்வரும் பகுதிகளில் காணலாம்.

### 1.ஒநேசிமு..............

பிலேமோன் என்ற பவுலின் நண்பரிடம் வாங்கிய கடனை திருப்பி தறாமல் ஏமாற்றியதால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு சிறைச்சாலையில் வைக்கப்பட்ட ஒநேசிமு என்பவன் எதிர்பாராத விதத்தில் சிறைச்சாலையில் பவுல் அப்போஸ்தலன் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலை அறையில் அடைக்கப்பட்டான்.

பவுல் அப்போஸ்தலன் ஓநேசிமுவின் மீது அன்பு வைத்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அவனுக்க பிரசிங்கித்தான். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவா–3:16) என்ற ஜீவ சுவிசேஷத்தை கேட்டபொழுது தான் செய்த தவறுக்காக மனம் வருந்தி இயேசுவிடம் மன்னிப்பு பெற்று புதிய மனிதனானான். ஆம் பிரியமானவர்களே இன்றைக்கும் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய நற்செய்தி ஒரு மனிதனை புதிய மனிதனாக மாற்றி மறுரூபமடைச் செய்கிறது. அல்லேலூயா.

பவுல் அப்போஸ்தலன் பிலேயாமுவுக்கு ஒரு கடிதத்தை எழுதி ஒநேசிமு விடுதலையடைந்து செல்லும் பொழுது கொடுத்தடுப்பினான். அதிலே அவன் "கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகனாகிய ஓநேசிமுக்காக உம்மை மன்றாடுகிறேன். முன்னே அவன் உனக்கு பிரயோஜனமில்லாதவன். இப்பொழுதோ உமக்கும் எனக்கும் பிரயோஜனமுள்ளவன். அவனை நான் உம்மிடத்திற்கு அனுப்புகிறேன் என் உள்ளம் போல் இருக்கிற அவனை ஏற்றுக்கொள்ளும்படி அன்பாக மன்றாடுகிறேன். நீர் என்னை உம்முடே ஐக்கியமானவன் என்று எண்ணினால் என்னை ஏற்றுக்கொள்வது போல அவனையும் ஏற்றுக்கொள்ளும். அவன் உமக்கு யாதொரு அநியாயம் செய்ததும் உம்மிடத்தில் கடன் பட்டதும் உண்டானால் அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும் நான் அதை செலுத்தி தீர்ப்பேன்" என்று (பிலேமோன்)

ஆம் இப்பொழுது ஒநேசிமு மனந்திரும்பியவனாக மறுரூபமடைந்தவனாக புதிய வாழ்க்கை வாழ புறப்பட்டு சென்றான். நாமும் கூட இந்த லெந்து நாட்களிலே நம்மிடம் காணப்படுகின்ற கெட்ட குணங்களாகிய ஏமாற்று, பொய் சொல்லுதல்,புறங்கூறுதல், இரண்டகம் பண்ணுதல் போன்ற காரியங்களை விட்டு விட்டு மனந்திரும்பி இயேசுவின் பிள்ளைகளாக மறுரூபமடைவோமாக.

## 2. சகேயு..

அரசாங்கத்திற்கு வரி வசூல் செய்யும் பணியிலிருந்த ஆயக்காரனாகிய சகேயு அநேக அக்கிரமங்களை செய்தான். வரி ஏய்ப்பு செய்வதற்காக செல்வந்தர்களிடம் லஞ்சம் வாங்கினான். எப்போதுமே லஞ்சம் வாங்குவதை கர்த்தர் அறுவருக்கிறார். காரணம் அவர் பரிதானம் வாங்காதவர். "உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும் கர்த்தாதி கர்த்தரும் மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கிறார். அவர் பட்சபாதம் பண்ணுகிறவருமல்ல, பரிதானம் வாங்குகிறவருமல்ல" (உபா–10:17)

பரிதானம் வாங்காதிருப்பாயாக பரிதானம் பார்வையுள்ளவர்களை குருடாக்கி நீதிமான்களின் வார்த்தைகளைப் புரட்டும். (யாத்-23:8) தற்காலங்களிலும் பரிதான வாங்குகிற குடும்பங்களிலே அநேக சாபங்கள் இருக்கிறதை பார்க்கமுடிகிறது. இப்படித்தான் சகேயு வாழ்ந்து வந்தான் எத்தனை சாபங்கள் அவன் வீட்டிலிருந்ததோ நமக்கு தெரியாது ஆனாலும் நிம்மதியற்றவனாக இயேசுவை பார்த்தாலாவது ஒரு மனஅமைதி கிடைக்காதா? என்று ஏங்கி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறி ஒளிந்து கொண்டு ஜனக்கூட்டத்தில் நின்றிருந்த இயேசவை பார்த்தான். பாவியை நேசிக்கிற இயேசு சகேயுவை பெயர் சொல்லி அழைத்து அவன் வீட்டிற்கு கூடச்சென்றார். முகத்தை அல்ல உள்ளத்தை பார்க்கிற தேவன் சகேயு இரட்சிக்கப்பட்டு மறுரூபமடைவான் என்பதை அறிந்திருந்தார்.

இயேசு அவன் வீட்டில் கால் வைத்தவுடனே சகேயு மனந்திரும்பி மறுரூபமடைந்தான். தன் சொத்தில் பாதியை ஏழைகளுக்கு கொடுக்க முன் வந்தான். அநியாயமாய் பணம் பெற்றவர்களிடத்தில் நான்கு மடங்கு திருப்பி தர தீர்மானம் பண்ணினான். எத்தனை ஆச்சர்யம் ஆம், பிரியமானவர்களே இயேசுவை உங்கள் உள்ளத்திலும் இல்லத்திலும் ஏற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது இப்படிப்பட்ட மனமாற்றமும் ஆசீர்வாதங்களும் நிச்சயமாக உங்களுக்கு கிடைக்கும்.

## 3. பிசாசு பிடித்தவன்.,,,,

நெடுநாளாய் பிசாசுகள் பிடித்தவனும் வஸ்திரம் தரியாதவனும் வீட்டில் தங்காமல் பிரேதக்கல்லறைகளிலே தங்கினவனுமாயிருந்த ஒரு மனுஷன் இயேசுவிடம் வந்தான். லேகியோன் என்ற அநேக பிசாசுகளின் கூட்டம் அவனை வெகுகாலமாய் பிடித்திருந்தது அவன் சங்கிலிகளினாலும் விலங்குளினாலும் கட்டுண்டு காவல் பண்ணப்பட்டிருந்தும் கட்டுகளை முறித்து போட்டு வனாந்திரங்களுக்கு துரத்தப்பட்டிருந்தான். அவனைப் பார்த்து இயேசு மனதுருகினார். ஒரே வார்த்தையினால் அந்தப் பிசாசுகளை துரத்தினார். அற்புதமாய் அவன் விடுதலையடைந்தான். அவன் வாழ்க்கையில் தலைகீழ் மாற்றம் வந்தது.

அர்த்தமில்லாமல் வாழ்ந்த அவன் வாழ்க்கைக்கு புதிய அர்த்தம் கிடைத்தது. இருளான அவன் வாழ்க்கை மாறி வெளிச்சமாகி பிரகாசித்தது. பிரயோஜனமற்றவனாக எல்லாராலும் வெறுக்கப்பட்டு உடலில் பல்வேறு காயங்களோடு சுடுகாட்டில் வாழ்ந்து கொண்டிருந்த அதே மனிதன் வஸ்திரம் தரித்து இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு எல்லோரும் பிரமித்தார்கள் (லூக்-8:27,39)அல்லேலூயா.

“கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும் இருதயத்தை சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய கற்பனை தூய்மையும் கண்களை தெளிவிக்கிறதுமாயிருக்கிறது” (சங்கீ –19:7,8)

ஆம், பிரியமானவர்களே இயேசு கிறிஸ்துவினுடைய ஒரே ஒரு வார்த்தை அந்தப் பிசாசு பிடித்தவனுடைய வாழ்க்கையை தலைகீழாய் மாற்றிப் போட்டது. அவன் இயேசுவின் பாதத்தை கெட்டியாய் பிடித்துக்கொண்டான். ஆனால் இயேசுவோ அவனைப் பார்த்து கர்த்தர் அவன் வாழ்க்கையில் செய்த நன்மையை போய் எல்லா இடங்களிலும் சொல்லச்சொன்னார். நாமும் கூட இந்த லெந்து நாட்களில் வேத வசனங்களை வாசித்து கண்களும் உள்ளமும் தெளிவடைந்து ஆண்டவர் நமக்கு செய்த நன்மைகளை எல்லா இடங்களிலும் சென்று சாட்சியாக அறிவிக்க வேண்டியது நம்முடைய கடமையாகும்.

இந்த லெந்து நாட்கள் நம்முடைய வாழ்க்கையிலே அர்த்தமுள்ள லெந்து நாட்களாக அமையட்டும். ஓநேசிமுவைப் போல, சகேயுவைப் போல, அந்த பிசாசு நீங்கின மனிதனைப் போல, புதிய மனதோடு, புதிய ஆவியோடு, புதிய பெலத்தோடு, புதிய கிருபைகளோடு இயேசுவுக்காக வைராக்கியமாக வாழ நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணிப்போம்.

“புதிய மனிதனாக மாறுவோம் பரமன் இயேசுவுக்காக பணி செய்வோம், மறுரூபமடைவோம் மற்ற மனிதரை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு தொண்டுகள் செய்வோம்” என்ற தீர்மானத்தை இந்த லெந்து நாட்களிலே நாம் எடுத்துக்கொண்டால் தேவ ஆசீர்வாதத்தை நிச்சயமாக பெற்றுக்கொள்வோம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து இந்த மாதம் முழுவதும் கரம்பிடித்து வழி நடத்துவாராக.
கர்த்தர் பணியில்,

கர்த்தரின் பணியில்,
அன்பு சகோதரன்,
S.ஸ்டாலின்

# அமலேக்கை மேற்கொள்ளுங்கள்

**மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள்; அவன் தன் கையைத் தாழவிடுகையில், அமலேக்கு மேற்கொண்டான். (யாத் 17:11)**

என்னோடு யுத்த களத்திற்கு வாருங்கள். கிறிஸ்துவுக்கு முன்பு மோசேயின் நாட்களில் உள்ள ஒரு யுத்தகளம் அது.

பாருங்கள் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் அமலேக்கியருக்கும் பலத்த யுத்தம் நடந்து கொண்டிருந்தது. தெரிந்து கொள்ளப்பட்ட தேவ ஜனங்களாகிய இஸ்ரவேலருக்கும் உலகபிரகாரமான மனுஷராகிய அமலேக்கியருக்கும் வலுத்த போராட்டம் நடக்கிறது. இஸ்ரவேலர் கானானை நோக்கி முன்னேறி செல்ல வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள் அமலேக்கியரோ அவர்களை முன்னேற விடாமல் தடுக்கிறார்கள்.

யாார் இந்த அமலேக்கியர்? ஏன் அவர்கள் இஸ்ரவேலரோடு யுத்தம் செய்ய வேண்டும்? இஸ்ரவேலரை முன்னேற விடாமல் தடுப்பதில் அவர்களுக்கு என்ன ஆர்வம் உண்டு?

"அமலேக்கு" என்றால் அது மாம்சத்தை குறிக்கும் மாம்ச இச்சையையும், மாம்ச சுபாவத்தையும், மாம்ச சுயபெலனையும், ஜென்ம சுபாவங்களையும், இவர்கள் வெளிபடுத்துகிறார்கள், இஸ்ரவேலரோ கர்த்தரால் தெரிந்து கொள்ளபட்ட ஆவிக்குறியவர்களாய் இருக்கிறார்கள். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் , ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும், போராடுகிறது, என்பதை நாம் மறந்து போய்விட கூடாது.

கிறிஸ்தவ வாழ்க்கையில் நம்மை முன்னேறவிடாமல் தடுக்கிற ஒரு பெரிய சத்திருவினுடைய வல்லமை உண்டு என்றால் அது மாம்ச போராட்டம்தான் ! மாம்ச இச்சைகளோடு நமக்குள்ள போராட்டம் அது வாலிபரானாலும் வயோதிபரானாலும் விட்டு வைப்பதில்லை அது நாம் பரம கானானை சுதந்தரிக்கிற வரையிலும் நம்மோடு கூட போராடுகிறது.

மாம்ச போராட்டம், மாம்ச இச்சைகளின் போராட்டம், ஜென்ம சுபாவங்களின் போராட்டம்! இதுதான் அமலேக்கு!.

ஒரு குழந்தை பிறக்கும் போதே தாய் அந்த குழந்தையை பாவத்தில் கர்ப்பம் தரித்திருக்கிற படியினால் அதனுடைய மாம்சத்திலுள்ள ஒவ்வொரு செல்களும் பாவ வாஞ்சையோடு ஏங்கி துடிக்கிறது. வளர வளர அந்த செல்களும், சரீர அனுக்களும், மாம்ச இச்சைகளை நிறைவேற்றவும், பாவத்தை தண்ணீரை போல் பருகவும் துணீகரம் கொள்கின்றன! உலகத்தின் அதிபதியான சாத்தானும், அதற்கு துணை நிற்கிறான்.!

ஒவ்வொரு நிமிடமும் சரீரத்தில் புது புது அனுக்கள் செல்கள் உற்பத்தியாகிறது, ஒவ்வொன்றிலும் அந்த மாமச் இச்சைகள், தொற்றிகொள்கின்றன, ஒரு மனுஷன் தலையிலிருந்து கால் வரை கல்வாரியின் இரத்தத்தால் மூடபட்டு இந்த இச்சைகளோடு போராடினாலொழிய அவனால் ஜெயம் காண முடியாது.

இஸ்ரவேல் அமலேக்கியரோடு யுத்தம் செய்கிறதை சற்று கவனித்து பாருங்கள். இநத அமலேக்கு யார் தெரியுமா? அவன் ஏசாவின் பேரன் ஒரு வேசியின் மகன் அவன் ஏதோம் தேசத்து பிரபுவானான்(ஆதி:36:12)

யாக்கோபின் சந்ததி கர்த்தரை பற்றிக்கொண்டு ஆவிக்குறியவர்களானார்கள், ஏசாவின் சந்ததியோ தங்கள் சுய பெலனை நம்பி கொண்டு மாம்சத்திற்குரியவர்களானார்கள்.

இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி பாருங்கள் அவர்கள் தேவனுடைய ஜனத்தார். கர்த்தர் அவர்களை பெலபடுத்தி வனாந்தரத்திலே பரலோகத்தின் மன்னாவை பொழிந்தருளினார் காடைகள் வந்து அவைகள் பாளையத்தை நிறப்பின, தாகத்தின் போது கிணற்றின் தண்ணீரை அல்ல கன்மலையை பிளந்து அவர்களுக்கு தண்ணீரை கொடுத்தார். காண்டாமிருகத்துக்கொத்த பலன் அவர்களுக்கு இருந்தது. அப்படிபட்ட இஸ்ரவேலரை மாம்ச பெலனான அமலேக்கியர் எதிர்த்து வந்தது எவ்வளவு ஆச்சர்யமான காரியம்.

தேவ பிள்ளைகளே! ஒரு மனுஷனுடைய ஆவிக்குறிய ஜீவியத்திலே முதலில் இருந்து கடைசிவரை போராடுகிற சத்துருவாகிய இந்த மாம்சத்தை நீ எளிதாக எண்ணாதே அசட்டையாக விட்டுவிடாதே அந்த யுத்தத்தில் நீ தோல்வியடைவாய் என்றால் பரமகானானை சுதந்தரிக்க முடியாதே.

எதுவரை இந்த போராட்டமும் யுத்தமும் இருக்கும்? "சூரியன் அஸ்தமிக்கும் வரை" என்று யாத் 17:12ல் நாம் வாசிக்கிறோம் ஆம் நம் ஜீவன் அஸ்தமிக்கும் வரை கடைசி மூச்சி நிற்கும் வரை இந்த மாம்ச இச்சைகள் போராடிகொண்டுதான் இருக்கும்.

இந்த யுத்தகளத்தில் அநேக விசுவாசிகளும் ஊழியர்களும்விழுந்து கிடக்க காரணம் என்ன? அமலேக்கியர் தேவ ஜனத்தை மேற் கொள்ள காரணம் என்ன? மாம்சமானவர்கள் மேற்கொள்ள காரணம் என்ன? மாம்சமானவர்கள் விசுவாசிகளை எதிர்த்து மேற்கொள்ள காரணம் என்ன? சாத்தான் தன் வாலினால் நட்சத்திரங்களை போன்ற பரிசுத்த வான்களில் மூன்றில் ஒரு பங்கை கீழே இழுத்து போட காரணம் என்ன?

மிக முக்கியமான இந்த செய்தியை ஜெபத்தோடு நீங்கள் படிக்கும்படி மிக அன்போடு உங்களை கேட்டு கொள்கிறேன். இந்த செய்தி இன்றைக்கு மாத்திரம் அல்ல என்றென்றைக்கும் உங்களுக்கு பிரயோஜனமுள்ளதாய் அமையும்.

அப்போஸ்தலனாகிய பவுலின் ஆரம்ப நாட்களில் இந்த மாம்சத்தோடு அவர் எதிர்த்து போராட வேண்டியதாயிற்று. பல வேளைகளில் அவர் தோல்வியை

தழுவியதை போல உணர்ந்தார். அவர் கதறி சொன்ன வார்த்தை என்ன தெரியுமா? "நிர்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார் ( ரோ 7:24)

அமலேக்கிய மாம்சமானது ஒரு ஆவிக்குரிய தேவனுடைய மனுஷனை மேற்கொள்ளும்போது அவன் ஒரு நிர்பந்தமான நிலைமைக்கு வருகிறான். "ஐயோ! நான் நிர்பந்தமான மனுஷன்" என்று கதறுகிறான். ஆவிக்குரிய ஜீவியம் செய்ய முடியவில்லையே விழுந்து விடுகிறேனே, சோர்ந்து போகிறேனே என்று சொல்லி கதறுகிறான். "நிர்பந்தமான மனுஷன்" என்கிற நிலைமையை நான் உங்களுக்கு விளக்க விரும்புகிறேன்.

ரோமருடைய நாட்களில் குற்றம் செய்கிற குற்றவாளிகளுக்கு ஒரு புதுமாதிரியான மரண தண்டணை உண்டு, அது என்ன தெரியுமா?

குற்றவாளியினுடைய சரீரத்தோடு மரித்த ஒரு மனுஷனுடைய பிரேதத்தை கொண்டு வந்து ஒன்றாக இணைத்து கட்டி விடுவார்கள். மரித்தவனுடைய கைகள் குற்றவாளியின் கைகளோடு, மரித்தவனுடைய கால்கள் குற்றவாளியின் கால்களோடும், மரித்தவனுடைய முழு சரீரமும் குற்றவாளியின் முழு சரீரத்தோடு இணைத்து கட்டபட்டுவிடும். அதை யாரும் அவிழ்த்துவிட கூடாது. அந்த குற்றவாளிக்கு யாரும் உணவு அளிக்கவும் கூடாது,அப்படி யாராவது அவனுக்கு உதவி செய்வதாக இருந்தால் செத்த பிரதேதத்தை உதவிசெய்கிறவர்களுடைய சரீரத்தோட இணைத்து கட்டிவிடுவார்கள். ஆகவே யாரும் அவருக்கு உதவி செய்ய முன்வரமாட்டார்கள்.

உயிருள்ள மனுஷரின் சரீரத்தில் செத்த பிரேதம் இறுக்கமாய் கட்டப்பட்டிருந்தால் என்ன நடக்கும். தெரியுமா? பிரேதம் குளிர்ச்சியுள்ளதாய் இருக்கிறபடியினால் உயிருள்ள மனிதனின் சரீர வெப்பத்தை, உஷ்ணத்தை, ஏன் ஜீவனையே உரிய ஆரம்பிக்கும் அது அவனுடைய இரத்தத்தையே உறிஞ்சுவது போல இருக்கும்,மறுநாளில் அந்த பிரேதம் அழுகி நாற ஆரம்பிக்கும், அந்த பிரேதத்தை தூக்கிக் கொண்டு "ஐயோ" நான் நிர்பந்தமான மனுஷன் என்று கதறிக்கொண்டு நடப்பான். பசி ஒரு பக்கம் பிரேத பளு ஒரு பக்கம் ,நாற்றம் ஒரு பக்கம், இன்னும் இரண்டு மூன்று நாட்களானால், பிரேதத்திற்குள் இருந்து வரும் புழுக்கள், ஜீவனுள்ள மனுஷனின் சரீரத்தை துளைக்கும், அந்த புழுக்கள் சரீரத்தை அரிக்கும்பொழுது ஏற்படுகிற வேதனை தாங்க கூடாததாய் இருக்கும், அவனுடைய கைகள் பிரேதத்தோடு இணைத்து கட்டபட்டிருக்கிறபடியினால் இவன் கைகைள எடுத்து அசைத்து இந்த புழுக்களை வெளியே எடுத்து போடவும் முடியாது. பிரேதவாடை தூக்கமின்மை, பசியால் அவன் தவித்து துடித்து மரிக்க வேண்டியதாய் இருக்கும், கடைசிவரை அவன் ஐயோ" நான் நிர்பந்தமான மனுஷன் யார் என்னை இந்த மரண சரீரத்திலிருந்து விடுதலையாக்குவார்? என்று கதறுவான், இது வெளிபிரகாரமான அமலேக்கோடு கூட உள்ள போராட்டம்.

( போராட்டம் இன்னும் தொடரும்)

# 2020 பிப்ரவரி மாத வேத வினாவுக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ம | 2 க | லா | 3 லெ | யே | ல் |
| லை | ண் | | கா | | 4ஜ |
| ச் | க | | பீ | | ல |
| சி | ளி | | ம் | | ப் |
| க | ல் | னே | | | பி |
| 5ர | | ட | | 6ப | ர |
| ங் | | னு | | ட் | ள |
| க | | ன் | கூ7 | ட | ய |
| ள் | ர் | 8உ | ஷ் | ன | ம் |
| | பே | | | ம் | |
| 9மு | ப் | ப | து | | 10யா |
| க | 11கொ | | | | ப் |
| நா | | | | ழை | 12பே |
| டி | | 13நி | ம் | ரோ | த் |

## மேலிருந்து கீழ்

1. ஆதி 8:5
2.ஆதி 6:8
3. ஆதி 10:13
4.ஆதி 7:6
6.ஆதி 4:17
7. ஆதி 4:5
9. ஆதி 3:16
10. ஆதி 9:27

## கீழிருந்து மேல்

8.ஆதி 6:18
11.ஆதி 6:14

## இடமிருந்து வலம்

12. ஆதி 8:4

## வலமிருந்து இடம்

1.ஆதி 5:15
5.ஆதி 10:10
8. ஆதி 8:22
9. ஆதி 6:15
13. ஆதி 10:9

## 2020 பிப்ரவரி மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. மரகதம் ஸ்டீபஃன்
Sis. நகோமி ஜான்சன்
Sis. மெர்சிலின் தயா இயேசு ரெத்தினம்
Sis. சாந்தி
Sis. செலின் டேவிட்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. லதா கிருஸ்டோபர்
Sis. ஜீனா சதீஷ்குமார்
Sis. எழிலரசி டேனியல்ராஜ்
Bro. எட்வின் ஞானதுரை

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

**"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; " (ஆதி – 12:2)**

செல்வி. கிருபா கலிய மூர்த்தி
செல்வன். ஷெரிடன் சைமன் பால்ராஜ்

சகோதரி. வித்யா வில்சன்

சகோதரி. அனிதா திவ்யராஜ்
சகோதரி. சாரா சவிதா சந்தோஷ்

சகோ. அருள்மணி
செல்வன். ஜேடன் பால் கிரண்குமார்

சகோ. ஜெயக்குமார்
சகோ. சுனில் சுந்தர்ராஜ்

செல்வன். டியான் பென்ஸம் சைமன்
செல்வன். ஆல்வின் வர்கீஸ்

செல்வி. ஜாண்சி ராணி ராஜவேல்
செல்வன். ஜோயல் ஜென்ஸர் ஜிவல் சிங்

சகோ. பாலகிருஷ்ணன்
சகோ. சாமுவேல்

செல்வி. திவ்யா அருள்மணி

சகோ. ஜினு. T
செல்வன். ஜாண்ராஜ் ராஜவேல்

செல்வி. நிகிட்டா அருண் இம்மானுவேல்
சகோ. வினிஷ்

சகோ. ஜாண் மில்லர்
செல்வன். ஜெகு சாமுவேல் செல்வசிங்

செல்வன். அட்ரியல் கேமுவேல் தாசையா
சகோ. ஜாண்போஸ்கோ
சகோதரி. மரியம் பாக்கியசெல்வி

சகோதரி. ஆஸ்லி முத்தையா

சகோ. இயேசுரெத்தினம்

செல்வி. ஸ்டெஃபானா சதீஸ்குமார்

செல்வி. அபியா செல்வி தர்மர்
சகோ. லாசர் ராஜாமணி
சகோ. முத்தையா
சகோ. ராஜா ரவிச்சந்திரன்

செல்வி. ஜெஸ்வின; M. யேசுதாஸ்

சகோதரி. எழிலரசி டேனியல் ராஜ்
சகோ. பால் டேனியேல்

செல்வி. ஜாஸ்மின் ஏஞ்சல் தாமஸ்

சகோதரி. ஷீபா ஜிவல்சிங்

சகோதரி. கீதா ஜெயக்குமார்

**உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)**

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி & திரு. ஆசீர்வாதம்

திருமதி & திரு. லாசர் ராஜாமணி

திருமதி & திரு. ஜெயசீலன்

திருமதி & திரு. ஜஸ்டஸ் விஜில் குமார்

திருமதி & திரு. சுகுமார்

திருமதி & திரு. சத்தியநாதன்

# 2020 மார்ச் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/03/2020 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ. ஆரோக்கியதாஸ் |
| 08/03/2020 | சகோ. ஜினு | சகோ. அசோக்குமார் |
| 15/03/2020 | சகோ. சுகுமார் | சகோ.பிரசாத் |
| 22/03/2020 | சகோ. பிராங்ளின் | சகோ. தாமஸ் |
| 29/03/2020 | சகோ. கிருஸ்டோபர். M | சகோ. அந்தோனி |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/03/2020 | சகோ.ஐசக்துரை | சகோ.ஜெய சேகர் |
| 13/03/2020 | சகோ. வில்ஸன் | சகோ.கிருஸ்டோபர் |
| 20/03/2020 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 27/03/2020 | சகோ. டேவிட் ஜெயகுமார் | சகோ. சாமுவேல் தாசையா |

**12/03/2020** அன்று முழு இரவு ஜெபம் (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் )– நேரம் இரவு 10 மணி முதல் அதிகாலை 2:00 மணிவரை

**28/03/2020** அன்று மாதாந்திர பெண்கள் ஐக்கிய கூடுகை
இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு – நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:30
(வேத வினா பகுதி எஸ்தர் புத்தகத்தில் இருந்து)
(பொருப்பெடுத்து நடத்துபவர் சகோதரி ஹெப்சிபா ஸ்டீஃபன் அவர்கள் குடும்பம்)

**27/03/2020** அன்று மாதாந்திர வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு – நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:30
(சகோ. பிரிசில்லா ஆமோஸ் விஜயகுமார் அவர்கள் குடும்பத்தின் சார்பில்)
(வேத வினா பகுதி ஏசாயா புத்தகத்தில் இருந்து)

# 2020 மார்ச் மாதத்திற்கான வேத வினா!

## கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | | | | | |
| | | | | | | | | | | 3 |
| 4 | | | | | | 5 | | | | |
| | | | | 6 | | | | | | |
| | | 7 | | | | | | | | |
| | 8 | | | | | | | | | 9 |
| | | | | 10 | | | | 11 | | |

விடைகளை வருகின்ற 18-03-2020க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரிலோ அல்லது வாட்ஸ்ஆப்ஸிலோ (ராயவளாயீள சூ 66015503 – றவைா யேஅந ) அனுப்பும்படி (கொடுக்கும்படி) கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை

• "ஆதியாகமம்" 11,12,13,14,15,16,17,18,1

### மேலிருந்து கீழ்

2.சாராள் நிமித்தம் பார்வோன் ஆபிரகாமுக்கு பாராட்டினது? (2)

4.அம்மோன் புத்திரருக்கு தகப்பன் யார்?(5)

### கீழிருந்து மேல்.

5 .ஆகாரின் நாச்சியார் (3)

7. ஆரான் மரித்த தேசம் (5)

9. எமோரியர் குடியிருந்தஇடம் (6)

10. அபிமெலேக்கின் இருதயம்,,,,,,,,, இருதயம் ?(4)

11. சூருக்குப்போகிற வழியருகே ஆகாரை கண்டது?(6)

### வலமிருந்து இடம்.

1. நீ ,,,,,,,,,,,இருப்பாய்?(7)

4. ஆபிராம் பலிபீடம் கட்டின ஸ்தலத்திற்கு மேற்கே உள்ளது? (4)

6. நீ பயப்படாதே நான் உனக்கு கேடகமும் உனக்கு ,,,,,,, பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார் ? (2)

7. வானத்திலிருந்து வருஷித்தது? (5)

10. பின்னிட்டு பார்த்து ஆனது ? (6)

### இடமிருந்து வலம்.

3.பேலாவின் ராஜா யார் ? (3)

8. அர்பக்சாத்தின் தகப்பன்?(2)

## – – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – –

மத்தேயு 7:7

# மிஷனரி செய்திகள்

## அலெக்ஸாண்டர் மெக்கே

(1849–1890)

ஸ்காட்லாந்து தேசத்தில் ரைனே என்ற இடத்தில் 1849–ம் வருடம் அக்டோபர் 13–ம் தேதி பிறந்தார். சிறு வயதிலேயே தனது இருதயத்தை கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்தவுடன், நேர்மையாக வாழவும், கிறிஸ்துவுக்காக ஏதாவது செய்யவும், துடிப்புடன் இருந்தார். இவரது வாழ்வைக் கவனித்த பெற்றோரும் தங்களது மகன், ஒரு போதகராகவோ மிஷனெரியாகவோ மாறுவான் என்ற நம்பிக்கையுடன் இருந்தனர். சபைப் போதகரான தனது தந்தையின் வேத போதனைகளும், தனது தாய் சொல்லும் வில்லியம் கேரி, ஹென்றி மார்ட்டின் டேவிட் லிவிங்ஸ்டன் போன்றோரின் மிஷனெரி சரிதைகளையும் விரும்பிக் கேட்பார்.தொழில் நுட்பத்தில் அதிக ஆர்வமுடைய அலெக்ஸாண்டர் தனது தகப்பனாரின் ஆலயக் கட்டுமானப் பணியின்போது, அங்குள்ள தொழிலாளர்களுடன் சேர்ந்து பணி புரிந்தார்.

பதிமூன்று வயதான அலெக்ஸாண்டர் கப்பல் கட்டும் தொழில்நுட்ப கல்வியைக் கற்றார். டேவிட் லிவிங்ஸ்டன் என்ற மிஷனெரியின் வாழ்க்கைச் சரிதையைப் படித்து விட்டு தனது டைரியில் லிவிங்ஸ்டன் இறந்து விட்டார் ஆப்பிரிக்க தேசத்தில் தேவனையும் தனது அயலானையும் நேசித்த ஸ்காட்லாந்து கிறிஸ்தவன் நீயும் போய் அப்படியே செய் என்று எழுதினார் அலெக்ஸ்.

பலவிதக் கேள்விகளுடன் அலெக்ஸ் 1875 ஆம் ஆண்டு டிசம்பர் 12–ம் தேதியில் டெய்லி ரெவியூ என்ற பத்திரிக்கையைப் படிக்க நேர்ந்தது. அதில் ஸ்டேன்லி எழுதிய கடிதம் அச்சாகியிருந்தது அதில் உகாண்டாவின் ராஜா வெள்ளை மனிதர்களின் கடவுளை அறிய வாஞ்சை காட்டுகிறார் உகாண்டா மக்களின் நோய்களை குணமாக்கவும் அவர்களுக்கு வீடுகளைக் கட்டவும் எந்த வேலை செய்யவும் ஆயத்தமாக உள்ள மனிதர் கிடைப்பாரேயானால் அவர் ஆப்பிரிக்கா தேசத்தை மீட்பவராவார் என்று எழுதியிருந்ததை படித்த அலெக்ஸாண்டருக்கு இது தெய்வீக அழைப்பாகவே இருந்தது.

1876–ம் ஆண்டு 7 வாலிப மிஷனெரிகளுடன் ஆப்பிரிக்கா தேசத்திலுள்ள உகாண்டாவிற்கு கப்பல் ஏறினார் அலெக்ஸ். உகாண்டா மக்கள் தீய ஆவிக்கு பயந்து எப்போதும் தாயத்துக்களை அணிந்துகொண்டும், வீட்டின் கதவுகளில் தொங்கவிட்டும் இருப்பார்கள். மந்திரம் சூன்யம் போன்றவற்றை எதிர்த்து பிரசங்கித்ததுடன் செயல்முறை விளக்கமாக ஒரு தாயத்தை விலை கொடுத்து வாங்கி மக்கள் முன்பாக அதை எரித்து காண்பித்தார். ஒன்றும் நடக்காததை கவனித்த மக்கள் அலெக்ஸை நம்ப ஆரம்பித்தனர்.

ராஜாவின் தாய் மரித்தபோது சவப்பெட்டி செய்ய அலெக்ஸாண்டரிடம் கேட்டனர். ராஜா விரும்பியபடியே அதை திறம்பட வடிவமைத்ததால் ராஜா அவரைப் பாராட்டினார். அதைப் பயன்படுத்திக்கொண்டு ராஜாவிடம் மரணத்திற்கு பின் ஒரு நித்திய வாழ்வு உண்டு என்பதை தைரியமாக பகர்ந்து கொண்டார். அதுமட்டுமல்லாமல் ராஜாவுடன் ஒரு நல்ல உறவையும் சம்பாதித்தார். உகாண்டா மக்களுக்கு அங்குள்ள மாசுபட்ட தண்ணீரால் நோய்க்கிருமிகள் தாக்கி பல்வேறு நோய்களால் அவதிப்படுவதைப் பார்த்து கிணறு வெட்ட ஆரம்பித்தார். தன்னுடன் எடுத்து வந்த இயந்திரம் மூலம் எழுத்து உருவங்களைப் பெரியதாக அச்சிட்டு

மக்களுக்கு எழுதப் படிக்கச் சொல்லி கொடுத்தார். தனது மீதியான நேரத்தை புதிய ஏற்பாட்டு பகுதிகளை அவர்களது மொழியில் மொழி பெயர்ப்பும் செய்தார். கிணறு வெட்டுவது தொழிற்கூடம் அமைப்பது பள்ளிக்கூடம் நடத்துவது பாதை அமைப்பது என்ற பல பணிகளை அலெக்ஸாண்டர் செய்த போது தனது இலக்கான ஆத்தும ஆதாயப் பணியை மறக்கவில்லை.

ஆத்துமாக்களுக்கு பற்றி எரியும் வைராக்கியத்தை எனக்குத் தாரும் என்றும் அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்கும் இரட்சிக்கும் கிறிஸ்துவுக்குமிடையே ஒரு இணைப்பாக இங்கு நான் நின்று கொண்டிருக்கிறேன் என்று ஜெபிப்பார். இவரது அர்ப்பணிப்பை ஆண்டவர் கனம் பண்ணி செம்பெரா என்பவரை முதல் விசுவாசியாகத் தந்தார். இவரது ஞானஸ்நானத்திற்குப் பிறகு ராஜாவின் மூன்று ஆட்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். அதன் பிறகு அநேக ஆத்துமாக்கள் மந்தையில் சேர ஆரம்பித்தனர். ராஜாவும் சுவிசேஷத்தை ஆர்வமாகக் கேட்டு ஞானஸ்நானம் எடுக்க ஆயத்தமாக இருந்தார். ஆனால் பலதாரமணம் சூன்யம் செய்தல் அடிமைத் தொழில் மற்ற ஆதிவாசிகளைக் கொள்ளையிடுதல் விக்கிரக ஆராதனை போன்றவற்றை முழுமையாக கை விட்டாலொழிய தான் ஞானஸ்நானம் கொடுக்க இயலாது என்று அலெக்ஸாண்டர் சொன்ன போது அதை ராஜா ஏற்க மறுத்தார்.

ராஜாவின் சுகவீனத்தின் போது மந்திரவாதிகளின் வார்த்தையின்படி இரண்டு ஆயிரம் ஏழை விவசாயிகள் கொல்லப்பட்டனர். அலெக்ஸாண்டர் தன்னுடைய உயிரையும் பணயம் வைத்து ராஜாவிடம் உயிர்களைக் கொல்லுவதை விட்டுவிடச் சொல்லி கெஞ்சினார். சிறிது நாட்களில் ராஜா இறந்து போனார். அவருக்குப் பின் வந்த ராஜாவும் அதிக்க கொடூரமானவன். மூன்று கிறிஸ்தவ வாலிபர்களின் கரங்களை வெட்டித் தீயிலிட்டுக் கொலை செய்தான். அதுமட்டுமல்லாமல் 200 கிறிஸ்தவர்களை பிடித்து கைகளை வெட்டி தீயில் சுட்டு எரித்தான். மீதியாய் இருந்தவர்கள் சிதறப்பட்டு போனார்கள். அதிகம் சோர்வுற்ற அலெக்ஸ் பவுலைப் போல நாங்கள் எப்பக்கமும் நெருக்கப்பட்டு சோர்வடைவதில்லை என்ற வாக்குக்கேற்ப தன்னை தேவனுக்குள் திடப்படுத்திக்கொண்டு ஊழியத்தைத் தொடர்ந்தார்.

உகாண்டா தேசத்திற்கு மிஷனெரித் தேவை என்று கடிதம் எழுதிய ஹென்றி ஸ்டான்லி அலெக்ஸாண்டர் பணி செய்த இடத்திற்கே வந்து அவரை உற்சாகப்படுத்தினார். 1890-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8-ம் தேதி ஆப்பிரிக்கா தேசத்தில் கடுமையான காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு தனது 41-வது வயதில் உகாண்டாவிலேயே மரித்தார். 14 வருடம் ஆப்பிரிக்கா தேசத்திலே பணிபுரிந்த அலெக்ஸ் ஒரு முறை கூட தனது சொந்த நாடு திரும்பவில்லை.

41-வயதான இளம் பொறியாளர் உகாண்டா பகுதிக்காகவே தனது உயிரையே தந்ததால் இன்று உகாண்டா பிரதம மந்திரியும், ராஜாவும் கிறிஸ்தவர்கள். தலைநகரில் ஒரு அழகிய தேவாலாயம் உண்டு. இங்கு 7000 உகாண்டா கிறிஸ்தவர்களும் உண்டு. அடிமை வியாபாரம் முற்றிலும் நிறுத்தப்பட்டுவிட்டது. ராஜாவுக்காக விக்கிரகத்திற்காக மனிதர்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட்டது. இப்படிப்பட்ட பெரிய மாறுதலை அலெக்ஸாண்டர் தன் சொந்த கண்ணால் பார்க்கவில்லை என்றாலும் அவர் செலுத்தின விலைக்கிரயம் வீணாகவில்லை.

அன்பு சகோதரன்

**S.சுகுமாரன்**

**"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்" (நீதி–4:23)**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். மாயையான உலகில் வாழ்ந்துகொண்டிருக்கும் கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப சகோதரனே சகோதரியே எல்லாக்காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். அது கர்த்தர் தங்குகிற ஆலயமாயிருக்கிறது.

உலக சம்பாஷனைகளுக்கு இடம் கொடுத்து கிறிஸ்துவின் அன்பை விட்டு பிரிந்து உலகம் மாயையாய் கொடுக்கிற அற்ப சந்தோஷத்திற்காக கர்த்தர் உனக்காக வைத்திருக்கும் பெரிதான ஆசீர்வாதங்களை இழந்து விடாதே.

கர்த்தர் உன்னை விட்டு போகாதபடிக்கு உன் பாளையம் சுத்தமாக இருக்கக்கடவது. (உபா–23:14) அன்பான தேவ பிள்ளைகளே, கர்த்தர் நம்மை விட்டு விலகி போகாதபடிக்கு நம்முடைய பாளையம் சுத்தமாய் இருக்க வேண்டும். வேதம் சொல்லுகிறது " தேவன் நம் பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாய் நிற்பவன் யார்? என்று (ரோம–8:31)

தேவன் நம் பட்சத்தில் இல்லையென்றால் பிசாசானவன் நம்மை எளிதில் மேற்கொள்ளுவான். வாலிப நாட்களை ஆண்டவரோடு செலவிட விடாதபடி அநேக பாவமான பழக்க வழக்கங்களுக்கு நம்மை அடிமையாக்குவான். அவன் திட்டத்தை உன்னால் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் நீ ஆண்டவரோடு பிரிந்து பிசாசு காட்டும் பாதையில் செல்லும்போது அவன் உன்னை அடிமையாக்குவான்.

இப்படியாகத்தான் ஆதாம் ஏவாளிடம் தேவன் சாப்பிடகூடாது என்று சொன்ன கனியை சாப்பிட வலியுறுத்தினான். இதை சாப்பிடும் போது நீங்கள் தேவர்களை போல மாறுவீர்கள் என நாவிற்கு இனிமையாய் கேட்பதற்கு இன்பமாய் பேசி வஞ்சித்தான். முடிவில் அவர்கள் சாபத்திற்குள்ளானார்கள் என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

அன்பான தேவனுடைய பிள்ளைகளே இப்படியாகத்தான் நீங்கள் உபயோகப்படுத்தும் ளழனைஉயட அநனலையக்களிலும் பிசாசானவன் அநேகரை அடிமையாக்கி வைத்திருக்கிறான். இதன் மூலம் அநேக தேவனுடைய பிள்ளை தங்கள் வாழ்க்கையை நாசமாக்கி கொள்கிறார்கள் என பார்க்க முடிகிறது. நான் சற்று நேரம் செலவழிக்கத்தான் இவ்வளது சமூக வளைதளங்களை பார்க்கிறேன் என்று நீங்கள் சொல்லலாம்.

ஆனாலும் "உங்கள் எதிராளியான சாத்தான் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகிறான்" (1-பேது-5:8)என்று தெளிவாக வேதம் சொல்கிறது.

அறிமுகம் அல்லாத நபர்களை அறிமுகப்படுத்துவான் அவனை நல்லவனாகவும் அவளை நல்லவளாகவும் உனக்கு காட்டி உலகப்பிரகாரமான வாழ்க்கைக்கு உன்னை திசைத் திருப்பி உன் வாழ்க்கையை நாசமாக்குவான்.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறார் எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது. எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு ஆகிலும் நான் ஒன்றுக்கும் அடிமைப்பட மாட்டேன். (1-கொரி-6:12) உனக்கு எல்லாவற்றையும் அனுபவிக்க அதிகாரமுண்டு ஆனாலும் பிசாசு உன்னை மேற்கொள்ளாதவாறு எச்சரிக்கையாயிரு. அவன் உன் வாழ்க்கையை நாசமாக்குவான். அனேக காரியத்தை உனக்கு காண்பித்து இப்படி உன் வாழ்க்கை நீ அழகாக மாற்றலாம் என ஆசை வாத்தை கூறுவான் எச்சரிக்கையாயிரு.

"நெடுங்காலமாய் காத்திருத்தல் இருதயத்தை இளைக்கப்பண்ணும், விரும்பினது வரும்போதோ ஜீவ விருட்சம் போலிருக்கும். (நீதி-13:12) அநேக வாலிப சகோதர சகோதரிகள் இன்றைய கால கட்டங்களில் தேவனுடைய சித்தத்திற்கு தங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுப்பது கிடையாது. தாங்களே தங்கள் வாழ்க்கைத் துணையை தேடிக்கொண்டு பிசாசு விரிக்கிற வலையில் மாட்டிக்கொண்டு கர்த்தர் குறித்ததை அவர்கள் வாழ்க்கையில் நிறைவேறுவதற்கு தடையாய் அவர்களே இருக்கின்றனர்.

"யோபு சொல்கிறார் எனக்கு குறித்ததை அவர் நிறைவேற்றுவார்" (யோபு-23:14) என்று. வேத வசனத்தை வாசித்து அதன்படி நடக்காமல் எப்பவோ ஏறப்போகும் இரயிலுக்கு டிக்கெட் எடுத்து வைப்பது அதிக முட்டாள்தனமல்லவா?

கர்த்தர் உங்களுக்கு குறித்ததை நிறைவேற்ற வல்லவராயிருக்கும்போது பிசாசானவன் காட்டு பாதையில் செல்லாதபடி உங்கள் இருதயத்தை காத்துக்கொள்ளுங்கள். கர்த்தர் உங்களுக்கு குறித்த நல்ல வாழ்க்கைத் துணையை எதிர்காலத்தை நிச்சயம் தருவார்.

கர்த்தர் தாமே நம் அனைவரோடுங்கூட இருப்பாராக.
தேவன் நம்மை நடத்துவாராக

வாலிபம் இயேசுவுக்கே.

# என் நிழனாவர் இயேசு!

கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார். சங்கீதம் (121:5) 7. நீர் எனக்குத் துணையாயிருந்ததினால், உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன். சங்கீதம்( 63:7)

கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெரு வெள்ளத்தைப்போல் இருக்கையில், நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்(ஏசாயா 25:4)

ஒரு பெரும் அமெரிக்க கோடீஸ்வரனை மரண பயம் வாட்டியது, தீடீரென உலக யுத்தம் ஏற்பட்டு. தன் நகரில் அணு குண்டு பொழிந்தால் என்ன செய்வது என்று நினைத்து கலங்கினார்.எனவே அனுகுண்டு வீச்சில் இருந்து தன்னையும் தன்குடும்பத்தையும் காத்து கொள்ள பூமிக்கடியில் ஒரு பெரிய அணுகுண்டு மறைவிடம் ஒன்றை கட்ட தீர்மானித்தார், பெரிய பெரிய விஞ்ஞானிகள், கட்டிடநிபுணர்கள், எஞ்சினியர்கள் இடைவிடாதபடி உழைத்து பலகோடி செலவில் அனுகுண்டு வீச்சில் இருந்தும் தப்பகூடிய உறுதியான பங்களாவை கட்டி முடிததனர்.

அந்தபங்களாவை பிரதிஷ்டை செய்யும்படி அந்த கோடீஸ்வரன் பிரபல தேவ ஊழியரான ஒருவரை அழைத்திருந்தார், ஒவ்வொரு அறையும் போதகருக்கு சுட்டிகாட்டி கொண்டே தான் அந்த அறைகளை விஞ்ஞான ரீதியில் அமைத்திருப்பதாகவும், எந்த வெப்பமும், அதிர்ச்சியும், அந்த பங்களாவின் சுவற்றை அசைக்க முடியாதென்றும், தான் அந்த சுவற்றை பெலனுள்ள உலோக கலவைகளால் தீர்மானித்ததாகவும் அதன் அருமை பெருமைகளை எல்லாம் வானளாவப் புகழ்ந்து பேசி கொண்டே போனான்.

போதகர் இதையெல்லாம் கேட்குக் கொண்டிருந்தவிட்டு, தான் இதைவிட குறைந்த செலவில், அதிக உறுதியோடு வேறு ஒரு மறைவிடம் அமைத்திருப்பதாகவும், அதில்தான் முழுபாதுகாப்பு உண்டு என்றும் அதை சிறகுகளின் இறகுகளாலே தான் கட்டியதாகவும், சொன்ன போது கோடீஸ்வரனுக்கு ஏற்பட்ட ஆச்சர்யமும் அதிர்ச்சியாகவும் கொஞ்சமானதல்ல.

அமைதியாக போதகர் சங்கீதம் 91:4ஐ திறந்து காட்டினார். "அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்.(சங்கீதம் 91:4)எப்படி தான் உன்னதமானவருடைய நிழலில் அடைக்கலம் புகுந்தார் என்றும் விளக்கிய போது வாயடைத்து நின்றான் அந்த கோடீஸ்வரன்! ஆம் தேவனுடைய பிள்ளைகளே கர்த்தர்தான் நம்முடைய நிழல்.

## கன்மலையின் பாதுகாப்பான நிழல்:—

அவர்"விடாய்த்த பூமிக்குப் பெருங்கன்மலையின் நிழலாகவும் இருப்பார்." (ஏசாயா32:2)"கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெரு வெள்ளத்தைப்போல் இருக்கையில், நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், நிழலுமானீர்." (ஏசாயா24:4)

அன்பான சகோதரியே நம் ஆண்டவர் நமக்கு அருமையான கன்மலை நிழலாய் இருக்கிறார். கன்மலை தண்ணீரால் நம்தாகத்தை தீர்க்கிறார். ஞான கன்மலையாகிய கிறிஸ்து நம்மோடு வருகிறார். கன்மலை தேனால் நம்மை போஷிக்கிறார். அதுமட்டுமல்ல கன்மலை நிழலாய் நம்மை பாதுகாக்கிறார். அல்லேலூயா ! நம் நிழலாகிய கிறிஸ்துவை நன்றியுள்ள இருதயத்தோடு துதிப்போமாக!.

கன் மலை நிழல் உனக்கு பாதுகாப்பக அமைத்திருக்கிறபடியால் நீ ஒரு போதும் கலங்காதே! மஹா ஞானமுள்ள குழிமுசல்கள் தங்கள் வீடுகளை கன்மலயிலே தோண்டி வைக்கின்றன. கன்மலை பாதுகாப்பிலிருந்து அவைகளை நரிகளோ ஆகாயத்து பருந்துகளோ பறித்து செல்ல இயலாது "உயர்ந்த பர்வதங்கள் வரையாடுகளுக்கும், கன்மலைகள் குழிமுசல்களுக்கும் அடைக்கலம்.( சங்கீதம் 104:18)

அன்பான சகோதரிகளே நீங்கள் எந்த நிழலில் அடைக்கலம் புகுந்து இருக்கிறீர்கள் பணமா?செல்வமா? செல்வாக்குகளா? அல்லது கன்மலையாகிய கிறிஸ்துவா? கிறிஸ்துவே கன்மலை என்று வேதம் சொல்லுகிறது( 1 கொரி 10:4) அவரே பெருங்காற்றுக்கு புகலிடம், கொடுமையானவர்களின்

சீரலுக்கு மறைவிடம், நம் ஒவ்வொருவருக்கும் இளைப்பாறும் இடம், அல்லேலூயா! கன்மலை வெடிப்புகளின் நிழலிலே புறாவாய் நம்மை அவரது ஐங்காயங்களுக்குள்ளும், மறைத்து கொள்வோமாக !

ஒரு முறை வடஇந்தியாவில் ஊழியம் செய்யும் ஒரு ஊழியர் தன்னுடைய அன்றைய நாளின் ஊழியத்தை ஒரு மலைகிராமத்தில் முடித்துவிட்டு ஒரு காட்டுபகுதியை கடக்கும் போது அந்த காட்டுபகுதியில் ஒரு கரடியை கண்டு பயந்து ஓட ஆரம்பத்திருக்கிறார். கரடி அவரை துரத்த ஆரம்பிக்க அவர் ஓட கரடி ஓட கடைசியில் ஊழியக்காரர் ஒரு பாறையின் இடுக்கில் தன்னை சரித்து அதில் மறைந்து கொண்டார். அந்த கரடியால் அதனுள் புக முடியவில்லை. அந்த பாறையில் மோதிமோதி பார்த்துவிட்டு உறுமிக்கொண்டே ஓடிவிட்டதாம்,

அந்த ஊழியருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு மட்டே இல்லை பாறையில் இருந்த அந்த பிளவு கிறிஸ்துவின் காயங்களின் பிளவே, என்பதை அவர் அறிந்தபோது அவரது உள்ளம் உருகிற்று அன்பான சகோதரியே அவர் கிறிஸ்துவின் அன்பை நிணைத்து ஆனந்த கண்ணீர் விட்டார், இன்றும் நாம் பாடும் "பிளவுண்ட மலையே புகளிடமே" என்ற பாடலை அவர் நன்றியோடு இயற்றினாராம்!

ஆம் பிரியமான சகோதரியே பக்தர் நிழல் அவரே சகோதரியே! தீய எண்ணங்கள் உன்னை துரத்தும் போது விட முடியாத கெட்ட பழக்கங்கள் உன்னை வேதனை படுத்தும்போது, அசுத்த எண்ணங்களும், கெட்ட நிணைவுகளும், நம்மை விரட்டும்போது கன்மலையாம் இயேசுவின் நிழலிலே வந்தடைவாய், தாவீது சொல்கிறார் "நீர் எனக்குத் துணையாயிருந்ததினால், உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன்." (சங்கீதம்63:7)

நன்றி ( அனு தினமும் இயேசுவோடு)

## ஆச்சர்யத்தில் மகா ஆச்சர்யம் எது!!!!!

ஈரானும் அமெரிக்காவும் முட்டிகொண்டிருக்கும் நிலையில் ஈரானின் பரம எதிரி இஸ்ரேல் உலகை அதிர வைக்கும் விஷயத்தை வெளியிட்டுள்ளது,

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைப்பு வெளியிட்டுள்ள அறிவிப்பின் படி " நாம் வான் பாதுகாப்பின் புது யுகத்தில் நுழைந்துவிட்டோம், இனி எதிரியின் ஏவுகனைகளும் விமானங்களும், நுழைய முடியாதபடிக்கு பலஅடுக்கு பாதுகாப்பு செய்துவிட்டோம் என்கிறது.

ஆம் லேசர் கற்றையினை வலுபடுத்தி மகா வலுவான வான வேலியினை அமைத்திருக்கின்றது இஸ்ரேல்.

ஏற்கனே அயர்ன் டோன், எனும் சிஸ்டம் அவர்களின் நகரங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் நிலையில் 3 அடுக்கு பாதுகாப்பிற்கு மாறுகிறது இஸ்ரேல்.

1000 ஏவுகனைகள் ஏவபட்டால் 10 ஏவுகனை முதல் அடுக்கில் தப்பினாலும் அடுத்த அடுக்கில் 2 ஏவுகனைகளை தப்பிவிட்டாலும் அதை 3 ஆம் ஆடுக்கு தடுக்கும்.

இந்த இரண்டாம் 3ஆம் கட்டத்தை தாவீது கவன் எனப்படும் (David sling) என்கிறது இஸ்ரேல்,

ஆம் பழை ஏற்பாட்டில் தாவீது கவன் கல்லினால் கோலியாத்தை கொன்றதினால் அந்த பெயராம், யூதர்களின் ஒப்பற்ற அரசன், அவன் என்பதால் அவன் அடையாளத்தையே அதற்கு பெயராய் வைத்துவிட்டார்களாம்

அயன்டோம், தாவீது கவன் 1, தாவீது கவன்2, என 3 அடுக்கு பாதுகாப்பில் நுழைகின்றது இஸ்ரேல்,

இன்றைய உலகில் அதி நவீண வான் பாதுகாப்பு இதுதான் உலகமே அவர்களை வியந்து ஒரு மிரட்சியுடனே பார்கின்றது,

ஏவுகனை, விமானம், ட்ரோன், ஈ, எறும்பு, புறா, என எதுவும், அதன் வானத்திற்குள் நுழையமுடியாதபடி அசத்தலாய் நிற்கின்றது அந்த யூத நாடு

ஆச்சர்யத்தில் மகா ஆச்சர்யம் இதுதானே !!!!!

( பகிர்ந்தவர் சகோதரி .ஜோன் ஆஃப் ஆர்க் அசோக்குமார் )

# கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு











## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

### செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்
66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்
99870126

பொருளாளர்– சகோ. எபநேசர்
23922058 – 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி
சகோதரி . பியூலா ஜெகநாதன்
60797360

வாலிப ஐக்கிய தலைவர் –
சகோ. ஆரோக்கியராஜ்
66159784



Church Website Address – ahmaditamilcongregation.org
Church 'E' mail ID – ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name – Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only